www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைத்தேர்வு - 2024

8 ஆம் வகுப்பு **அறிவியல்** பதிவு எண் 8013

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

குறிப்புகள்:

- ◆ மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- ◆ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- ◆ தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- ◆ தேவையான இடங்களில் படங்களைத் தெளிவாக வரைய வேண்டும்.

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 X 1 =10

1. எபோனைட் தண்டு ஒன்றினை கம்பளியால் தேய்க்கும் போது கம்பளி பெற்றுக் கொள்ளும் மின்னூட்டம் எது?
   அ) எதிர் மின்னூட்டம் ஆ) நேர் மின்னூட்டம்
   இ) பகுதி நேர்மின்னூட்டம் பகுதி எதிர் மின்னூட்டம் ஈ) ஏதுமில்லை
2. ஒரு எளிய மின்சுற்றை அமைக்கத் தேவையான மின் கூறுகள் யாவை?
   அ) ஆற்றல் மூலம், மின்கலம், மின்தடை ஆ) ஆற்றல் மூலம், மின்கம்பி, சாவி
   இ) ஆற்றல் மூலம், மின்கலம், சாவி ஈ) மின்கலம், மின்கம்பி, சாவி
3. ஒரு நிலைமின்காட்டி மின்னூட்டம் பெற்ற கண்ணாடித் தண்டினால் தூண்டல் முறையில் மின்னூட்டப்படுகிறது. நிலை மின்காட்டியில் இருக்கும் மின்னூட்டம் எது?
   அ) நேர்மின்னூட்டம் ஆ) எதிர்மின்னூட்டம் இ) அ மற்றும் ஆ ஈ) எதுவும் இல்லை
4. கேதோடு கதிர்கள் ______ ஆல் உருவாக்கப்பட்டவை
   அ) மின் சுமையற்ற துகள்கள் ஆ) நேர்மின்சுமை பெற்ற துகள்கள்
   இ) எதிர்மின்சுமை பெற்ற துகள்கள் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
5. கார்பன் டை ஆக்சைடு எம்முறையில் தயாரிக்கப்பட்டாலும் அதில் கார்பன் மற்றும் ஆக்சிஜனின் நிறைவிகிதம் மாறாதிருப்பது ______ விதியை நிரூபிக்கிறது.
   அ) தலைகீழ் வகித விதி ஆ) மாறா விகித விதி
   இ) பெருக்கல் விதி ஈ) பொருண்மை அழியா விதி
6. நீரில், ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகியவை ______ நிறை விகிதத்தில் இணைந்துள்ளன.
   அ) 1:8 ஆ) 8:1 இ) 2:3 ஈ) 1:3
7. பின்வரும் உயிரினங்களுள் எதில் இயக்கத்திற்குத் தேவையான தசைகள் மற்றும் எலும்புகள் காணப்படுவதில்லை
   அ) நாய் ஆ) நத்தை இ) மண்புழு ஈ) மனிதர்
8. நீருக்கடியில் நீந்துபவர்கள் ஏன் காலில் துடுப்பு போன்ற சிலிப்பர்களை அணிகின்றனர்?
   அ) தண்ணீரில் எளிதாக நீந்த ஆ) ஒரு மீன் போல காணப்பட
   இ) நீரின் மேற்பரப்பில் நடக்க ஈ) கடலின் அடிப்பகுதியில் நடக்க (கடல் படுக்கை)
9. உங்கள் வெளிப்புறக் காதினைத் (பின்னா) தாங்குவது எது?
   அ) எலும்பு ஆ) குருத்தெலும்பு இ) தசைநார் ஈ) காப்ஸ்யூல்
10. கரப்பான் பூச்சி எதன் உதவியுடன் நகர்கிறது?
   அ) கால் ஆ) எலும்பு இ) தசைக்கால் ஈ) முழு உடல்

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

11. மூன்று மின்விளக்குகள் ஒரே சுற்றில் மின்கலத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மின்சுற்று ______ எனப்படும்.
12. மின்னல் தாக்குதலில் இருந்து கட்டடங்களைப் பாதுகாக்கும் சாதனம் ______
13. ஒரு தனிமமானது ______ மாதிரியான அணுக்களால் உருவாக்கப்பட்டது.
14. புரோட்டான் ஒரு ______ மின்சுமை கொண்ட துகள்.
15. இரண்டு எலும்புகள் சந்திக்கும் இடம் ______ என அழைக்கப்படுகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**III** எவையேனும் 10 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி. **10 X 2 = 20**

16. சரியா/தவறா எனக் கூறுக. தவறெனில் திருத்தி எழுதுக.
பக்க இணைப்பில் அனைத்துக் கூறுகளிலும் மின்னோட்டம் மாறிலியாக இருக்கும்.

17. பொருத்துக.

அ) இரு ஒரின மின்துகள்கள் – நேர்மின்னூட்டம் பெறும்

ஆ) இரு வேறின மின்துகள்கள் – எதிர் மின்னூட்டம் பெறும்

இ) கண்ணாடித் துண்டை பட்டுத் துணியில் தேய்க்கும் போது – ஒன்றை விட்டு ஒன்று விலகும்

ஈ) ரப்பர் துண்டை கம்பளியில் தேய்க்கும் போது – ஒன்றை ஒன்று கவரும்

18. மின்முலாம் பூசுதல் என்றால் என்ன?

19. மின்சுற்று என்றால் என்ன?

20. பொருண்மை அழியா விதி வரையறு.

21. மாறா விகித விதி – வரையறு.

22. கீழ்க்காணும் சேர்மங்களின் பெயர்களை எழுதுக.
அ) $N_2O$ ஆ) $PCl_5$

23. தசைநாண் மற்றும் தசை நார் ஆகியவற்றை வேறுபடுத்துக.

24. எலும்புகூடு என்றால் என்ன?

25. கிரானியம் என்றால் என்ன?

26. நமது முதுகெலும்பு ஏன் சற்று நகரக்கூடியது?

27. **சரியா/தவறா தவறெனில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.**
இடுப்பு என்பது அச்சு எலும்புக்கூட்டின் ஒரு பகுதியாகும்.

28. ஆனோடு கதிர்களின் பண்புகளை எழுதுக.

29. ஒரு கண்ணாடித் தண்டினை பட்டுத் துணியில் தேய்க்கும் போது இரண்டும் மின்னூட்டமடையும் ஏன்? காரணம் கூறுக.

**IV** விரிவான விடையளி. **3 X 5 = 15**

30. தொடர் மற்றும் பக்க இணைப்புச் சுற்றை விளக்குக. *(அல்லது)*
மின்னல் எவ்வாறு தோன்றுகிறது?

31. கீழ்க்காண்பனவற்றின் வேதி வாய்ப்பாட்டினை எழுதுக.
அ) அலுமினியம் சல்பேட் ஆ) பேரியம் குளோரைடு இ) சில்வர் நைட்ரேட்
ஈ) மெக்னீசியம் ஆக்சைடு உ) ஹைட்ரஜன் குளோரைடு *(அல்லது)*
அடிக்கோடிடப்பட்டுள்ள தனிமங்களின் இணைதிறனைக் காண்க.
அ) $\underline{Na}Cl$ ஆ) $\underline{C}O_2$ இ) $\underline{Al}PO_4$ ஈ) $\underline{Ba}(NO_3)_2$ உ) $\underline{Ca}Cl_2$

32. மூட்டுகளின் வகைகளைக் கூறுக. ஒவ்வொரு வகைக்கும் ஒரு எடுத்துக்காட்டு தருக. *(அல்லது)*
பறவையின் எலும்புக்கூடு எவ்வாறு பறப்பதற்கு ஏற்றதாக உள்ளது?

*********



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com